அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 } விரோதி௵—பங்குனிமீ 1950௵ மார்ச்சுமீ—ஏப்ரல்மீ } இதழ் 12



MAHAMAHO... DR. U.V. S... BESAN... ...RARY, ...MADRAS-90.

சூர சங்காரத்தின் பொருட்டுச் சிவபெருமானும் ஆசிகூறி முருகனுக்கு ஆயுதம் வழங்குதல். (கந்தபுராணச் சித்திரவிளக்கம்—10)

இரண்டாவது மலர் வருகிற சித்தரைமீ ஆரம்பமாகிறது.
அதற்குமுன் சந்தா ரூ. 1-8-0 யும் அனுப்பவும்

398

பொருளடக்கம்

1. தெரிந்தவர் (திருப்புகழ் மணி) ...
2. அருளும் பொருளும் (இளவழகனர்) ...
3. மாதர் அகண்ட முருக நாம ஜப சங்கம் (என். எஸ். இராமச்சந்திர ஐயர்) ...
4. உருவம் (செ. பொ.) ...
5. கந்தர் கலிவெண்பா (குகபக்த ரசபதி) ...
6. ஔவை பிராட்டியார் (ஸ்ரீ வத்ஸன்) ...
7. எங்கே காணலாம் (மு. பொ. புவனகிரி) ...
8. ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் (V. S. வேங்கடராமன்) ...

நூதன வர்ணப் படங்கள்

சைவ சமயாசாரியர்

நால்வர் ரூ 1-0-0

குமர குருபரன்

(முருகன்) ரூ. 1-





சிவதாண்டவம் 14 × 20 ரூ. 1—8—0 அருணகிரிநாதர் ரூ. 1—8—0

160 பாடலடங்கிய திருப்புகழ்மாலை புத்தகம் ரூ. 0—8—0

அமிர்தவசனி காரியாலயம், 54. பந்தர் தெரு., சென்னை

"அமிர்த வசனி" இரண்டாவது வருட

சந்தா அறிக்கை.

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருட சந்தா ரூ 1-8-0 மார்ச்சு மாதம் முடிவதற்குள் மணி ஆர்டர் மூலம் அல்லது நேரில் செலுத்தவும். ஆயுள்சந்தா ரூ 25-0-0.

54, பந்நர் தெருவு, சென்னை 1.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 1 { விரோதி௵ பங்குனிமீ மார்ச்சு—ஏப்ரல் 1950 } இதழ் 12

தெரிந்தவர்

(திருப்புகழ் மணி]

தெரியக் கண்டாலன்றி, கண்டு பயனில்லை. கேட்டுத் தெரிந்தாலன்றி, கேட்டும் ப்ரயோஜனமில்லை. புகைப் படம் உள்ளிருந்தாலன்றி போட்டோ (photo)வில் விழுந்த உருவம் நிலை நிற்காது. கண்டதும் கேட்டதும் பயன்பட, காட்சியும் கேள்வியும் மனத்தில் அமர்ந்திடல் வேண்டும். அன்பிலே ஆதரவிலே பக்தியிலே நினைத்த மனம் செம்மை மனமென்று சொல்லலாம். மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்கவேண்டாமென்று பெரியோர்கள் சொல்லி யுள்ளனர். பசுமரத்தாணி போல் அன்பாய்த் தேடித் தெய் வத்தை நாடிய மனம், ஒருதரம் சொன்னால் போதுமாம்; ஒரு தரம் கேட்டால் போதுமாம்.

அருணகிரியார் சொல்லுவார். "ஒரு தரம் முருகா வென ஓதடியார் முடிமேல் இணைதாள் அருள்வோனே"

ஊறு பாவ வுறுப்பில் ஊறல் தேறு கரிப்பில்
ஊர வோடு விருப்பில் உழல்வேனோ

மற்றொரு பெரியார் பாடுவார் "ஒருதரம் சரவணபவா வென்று சொல்பவர் உளத்தில் நினைத்தவெலாம் உடனே கைகூடுமென்று வேதங்கள் மொழியுதே";. வள்ளலார் தெய்வமணிமாலையில் "ஒருமையுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்றார்.

பாஞ்சாலி துரியோதனன் சபையிலே துச்சாஸனனால் துகிலுரியப் பெற்று நின்ற அளவைகொள் கணத்தில் கண்ணனை நினைத்து, தன்னுடல் மறந்து, தன்னுள் சென்றவளாய், உலகை மறந்து, "ஒருமை" யுற்றாள் என்றார் பாரதியார். ஒருமையுற்ற மனமே செம்மை மனம்; தெரிந்த மனம். வாலியும் ராமநாமத்தை பலதரம் கேட்டும் கண்டும் தெரிந்திலன். ஸ்ரீராமர் பாணம் இதயத்தில் புகுந்த பின்னர், அதைப் பிடுங்கிக் கண்களால் பார்க்கும்போது, உயிர்க்கு ஆபத்து வந்துவிட்டது என்ற தருவாயில், இதயத்தின் ஆற்றல் ஒருங்கே ஏகாக்ரமாக இருக்கும் நேரத்தில் கண்டான். கம்பர் "தெரியக் கண்டான்" என்று பாடினார்.

செம்மைசேர் நாமம் தன்னை
கண்களில் தெரியக் கண்டான்

முகத்தின் கண்ணால் ஜகத்தைக் காணாது, அகத்தின் கண்ணால் கண்டாலன்றி, தெரியாது என்றார் திருமூலர். தெரியக் கண்டால், மனமது செம்மையாகும். செம்மை மனத்தராகி, ஒருதரம் தியானம் செய்தாலும் போதுமே. உணர்வில் நாடுமே முருகன் பாதம். கூடுமே பேரின்ப போகம். அனுபூதி எய்தி ஞானம் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தி பெறுவார் என்பர் அருணகிரி.

ஆனந்தம் பொங்கி அறிவோடிருப்போர்க்கு,
ஞானம்தான் ஏதுக்கடி—குதம்பாய்—ஞானம்தான்
ஏதுக்கடி.

குதம்பைச் சித்தர்

3

அருளும் பொருளும்

(இளவழகனார்)

நீரிலேயே அலைகள் தோன்றி ஒன்றை யொன்று மோதிக்கொள்கின்றன. ஒரே வயிற்றில் பிறந்த உடன் பிறப்பினரும், சில இடங்களில் சிக்கலெய்திப் போர் புரிகின்றனர். பகலெல்லாம் ஒருங்கு ஒத்திருந்து படித்த பள்ளிப் பிள்ளைகள், மாலையில் விளையாட்டு வெளியில் எதிருக் கெதிர் மாறிநின்று விளையாடுகின்றனர். கருத்தொருமித்து ஆதரவுபட்டு வாழ்க்கையின்பத்தில் ஓருயிராய்த் திளைக்கும் காதலர், ஆணும் பெண்ணுமாய் வேறுபட்டுப் பிறந்து ஊடி உயிரொளி மிகுக்கின்றனர். அவ்வாறே, உலக அரங்கில் அருளும் பொருளும் முரணிப் புரியுந் திருவிளையாடலைத்தான் என்னென்பது!

எண்ணிப் பார்க்குங்கால், இவை பலவும் மிகச் சிறந்த உள்ளொற்றுமை கொண்டு மேலே மாறுபட்டன போலத் தோன்றித் திருவிளையாடல் புரிதல் நன்கு விளங்குகின்றது. அகனமர்ந்த ஒருமையும் புறனமர்ந்த இருமையும் உலகத்தில் ஏன் இவ்வாறு அமையவேண்டும், அமைந்து ஆடல் புரிய வேண்டும்? புனிதவதியாரது புனித வரலாற்றில், முதலிற் கிடைத்த பொருள் மாங்கனிகள் இரண்டும் பின்னர் கிடைத்த அருள் மாங்கனிகள் இரண்டும் எவ்வளவு மாறு பட்டு விளையாடி அம்மையார் வாழ்க்கையிற் புரட்சியை விளைத்திருக்கின்றன!

2

விளையாட்டு வெளி வரையில் ஒருங்கே சென்ற பிள்ளைகள் விளையாடலில் மட்டும் எதிருக்கெதிர் அமைந்து ஏன் மாறுதல் வேண்டும்? இன்பம் பெருக்கவே என்பது எல்லார்க்குந் தெரிந்த தொன்று.

மெய்த் தேவர் துதித்திடத் தரு பொற்பார் கமலப்பதத்தினை
மெய்ப்பாக வழுத்திட க்ருபை புரிவாயே

அருளும் பொருளும் இவ்வாறே மாறுபட்டு விளையாடி மக்கட்குப் புரட்சியும் இன்பமும் விளைக்கின்றன; பண்பும் பயனும் மிகுக்கின்றன.

இவ்விரண்டன் ஒருமையை,உள் இணக்கத்தை அறியுந் திறந்தான் கலை என்பது. 'கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழால்' என்று தெய்வப் பெரியார் தெளிவித்ததில் கலைக்கு உரிய இடம் எது வென்பது நன்கு தெரிகின்றது. இக் கலையறிவின் செய்கையே மனையறம் என்க. கலையறிவின் முழுமையே மனையறத்தின் உணர்வு. திருக்குறட் காமத்துப்பாலில் கலையறிவின் முழுமையும், அறத்துப் பாலில் அதன் மனையறச் செய்கையும் திருவள்ளுவரால் விளக்கப்பட்டன.

அலைகளின் மோதலில், உடன் பிறப்பினர் பொருமலில், விளையாடுவோர் வீறலில், காதலர் ஊடலில், அருள் பொருள் முரணலில் இங்ஙனம் அவற்றின் மறைந்த இணக்கத்தைக் கண்டுகொண்டு ஒழுகும் அறிவு கலையறிவு என்னும் மனையற வுணர்வு என்றால், அது வாழ்க்கைக்கு எவ்வளவு பயனுள்ள கருவியாய் இருக்கின்றது! பொருளென்னும் திருமகளும் அருளென்னும் மலைமகளும் ஒருங்கிணங்கக் காணும் உயிர்த் தோழியாகக் கலையென்னும் மனைமகள் உலகுக்கு உதவிபுரிதல் எவ்வளவு வியக்கத் தக்கது!

காரைக்காலம்மையார் இவ்வாறு மனையறம் வல்ல கலைமகளாய்ப் பரமதத்தனுக்கு மாதேவியாய் வாய்த்தமை அவன் செய்த பன்னாட் புண்ணியமன்றோ! அம்மையாரின் தோற்றத்தை முதலிற் சொன்னபோது சேக்கிழார் பெருமான் 'திருமடந்தை அவதரித்தாள் என வந்து' எனத் திருமகள் நினைவும், பின்பு மனையறத்தில் திருவருளால் மாங்கனி எய்தப்பெற்றபோது 'வாசமலர்த் திரு அனையார்' என்று கலைமகள் நினைவும், அடுத்துப் பரமதத்தன் அம்மை

கூடிய கொங்கை நீடிய அன்பு
கூரவும் இன்று வரவேணும்

யாரைத் தெய்வம் எனக் கருதியபோது 'அணிகுழலவளை வேறோர் அணங்கெனக் கருதி' என மலைமகள் நினைவும் தோன்ற அருளிச் செய்த தொடர்கள் இங்கே உற்றுற்று உன்னற் பாலன.

மக்கள் முதலில் உடம்பென்னும் பொருளுருவாய்த் தோன்றுகின்றனர். நாளடைவில் அவர் அருளுருவாய்த் திகழ்தற்குரியர். அதற்கு இடையில் அவர்கள் கலையுருவாய் விளங்கல் இன்றியமையாதது.

பொருளுக்கும் கலைக்கும் இடைப்பட்டு நிற்கும் கலை பொருளை நுகரவும் உதவும், அப் பொருள்வழியே அருளை நுகரவும் உதவும். பொருள் நுகர்விலிருந்து மெல்ல அருள் நுகர்வுக்கு உயரும் அழகு முன்னேற்றமே நமக்குக் கலை தருவது! பொருளை நுகரத்தொடங்கும் முதல் நிலையிலிருந்து கலையறிவு மெல்ல மெல்ல வளர்ந்து மேலோங்கி, பொருளில் அருளை நுகரும் முழுமையை அடைகின்றது.

அதன்பின், பொருள் நினைவின்றி அருளை அதன் தனி நிலையில் நுகருந் தூய அறிவு ஊற்றெடுக்கும்; அது, மெய்யறிவு எனப்படும்.

எனவே, அருளைப் பொருள்வழி நுகர்தல் 'கலைஞானம்' எனவும், தனிவழி நுகர்தல் 'மெய்ஞ்ஞானம் எனவும் நம் முன்னோர் வழங்கி வந்தனர். இதனால் அவர் மிகநுண்ணிய நிலைகளில் விளங்கிவந்தமையுந் தெளியப்படும். 'உவமை யிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்' என்னும் அழகிய திருமொழி இங்கு நன்கு நினைவுகூர்தற் குரியது.

பொருள்மகள் பொருள் நுகர்வுக்குக் காரணமாயிருக்கின்றாள். கலைமகள் பொருள் நுகர்வுக்கும் அருள் நுகர்வுக்கும் காரணமாயிருக்கின்றாள். ஆயினும், பொருள்

விளங்கு கடம்பு விழைந்தணி தண்டை
விதங்கொள் சதங்கை அடிதாராய்

வழியே அவ் விரண்டுக்கும் காரணமாயிருக்கின்றாள். ஆகவே, பொருள் இருக்கையே அவள் இருக்கையாகின்றது ; எனினும் அவள் இருக்கை தூய்மையானது. திருமகளும் கலைமகளும் பொதுவில் இங்ஙனம் பொருளையே இருக்கையாகக் கொண்டிருத்தலின், இருவர்க்கும் தாமரையே இருக்கையெனவும், ஆனால் கலைமகள் இருக்கை அருளுக்கு உயர்த்தும் தூய்மையுடையதாகலின் அது வெண் தாமரை இருக்கையெனவும் முன்னோர் விளக்கினர். செந்நிறத்திலும் வெண்ணிறம் தூய்மை மிக்கது.

3

காரைக்காலம்மையார் முதலில் பொருள் மகளாய்த் தோன்றி, பின்பு கலைமகளாய் விளங்கி, அன்பு மனையறம் புரிந்து உயர்ந்து, அதற்குமேல் அருளுருவாய்க் காட்சியளிக்கும் பலைமகள் அணங்காய்த் தம் கணவனால் தெளியப் பெற்றமையின், கடைசியில் உலகுரு உதறி என்புடம்பில் அவ்வருள் நிலையின் சிறந்த மெய்ஞ்ஞானச் செல்வியராய் விளங்கினர். அவர் வரலாறு இந் நுண்ணிய அடிப்படையுண்மைக்கு ஆணியெனத் திகழ்கின்றது!

தேனினும் இனிய திருவாசகச் செழுமறையை நுகர்ந்து நுகர்ந்து பேரின்பச் சுவையில் தேக்குண்டு விளங்கிய வள்ளலார், அதனை அருளிய மணிவாசகப் பெருமானை ஆராமையாய்ப் போற்றுகின்ற இடத்தில், மேல் விளக்கியவாறு மாணிக்க வாசகர் பொருள் நிலையிலிருந்து கலை அருள் என்னும் நிலைகளில் நெறிமுறையே ஓங்கினமை நினைந்து,

மன்புருவ நடுமுதலா மனம் புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்தா ரெல்லாரும் ஏமாக்க,
அன்புருவம் பெற்றதின்பின் அருளுருவம் அடைந்தநீ
இன்புருவ மாயினையே எழில்வாத வூர்இறையே.

அமர்ந்து பவவினை களைந்து வருகொடி
யவந்த கனகல வருவாயே

என்று அழகாக அருளிச்செய்தனர். அன்புருவம் என்றது, கலையுருவம்; அதாவது, மனையறவுரு, பொருளில் அருளுரு. அருளுருவம் என்றது, தனி அருளுரு; அதாவது, மலைமகளுரு; துறவற உரு. இன்புருவம் என்றது, சிவ உரு; அதாவது, வீடுபேற் றுரு.

பொருள் நிலைக்கு மேற்பட்ட இம் மூவகை முன்னேற்ற நிலைகளை அருளொளி வள்ளலார், திருஞான சம்பந்தப் பெருமானை நினைந்து போற்றுகின்ற ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையிலும், முறையே 'உயிரநுபவம்' 'அருளநுபவம்' 'சிவ அநுபவம்' என்றும் அருளிச் செய்கின்றனர். இங்கே சிவ அநுபவம் என்றது இன் புருவம்; அதாவது, விடுதலை யுரு.

இணையற்ற நிலையில் உலகுக்கு வாழ்க்கைமறை வழங்கிய திருவள்ளுவப் பெருமான், அடிப்படையான இம் முன்னேற்ற முறைகளை நன்கமைத்தே, பொருள் நிலையைப் பொருட்பால் எனவும், பொருளிற் பொருளை நுகரும் முற்பகுதிக் கலைநிலையைக் காமத்துப்பால் எனவும் விளக்கியபின், அதற்கு மேற்பட்ட முன்னேற்றமாகிய பொருளில் அருளை நுகரும் மேல் வகைக் கலைநிலையை அன்புருவாய் திகழும் அறத்துப்பாலின் இல்லறம் எனவும் தனி அருள்நிலையை அருள் உருவாய்த் திகழும் அறத்துப் பாலின் துறவற விரதப்பகுதி எனவுந் தெளிவித்து, இன்புருவாகிய சிவ அநுபவ வீட்டு நிலையை அத்துறவற ஞானப் பகுதி என முடித்து நிறுவுவ ராயினர்.

இத்தகைய மேல்நிலை முன்னேற்றமே வாழ்க்கைக்கு அழகாதலின் அந்த அருளழகை நினைந்தே வள்ளலார் திருவாதவூரரை 'எழில் வாதவூர் இறை' என்று வாயார வழுத்தி மகிழ்ந்தார். காரைக்காலம்மையாரிடம் இந்த மெய்யுணர்வு அழகு மிகச் சிறந்திருந்தது.

நீ தத்துவமாகி நேமத் துணையாகி
பூதத்தயவான போதைத் தருவாயே

வாதவூரரை வழுத்திய வள்ளலார் திருமொழி, அம்மை யார்க்கும் பொருந்தும். அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்தநீ இன்புருவ மாயினையே எழில் காரைக்கால் இறையே என்று நாமும் போற்றலாம்.

அம்மையாரின் அன்புரு விளக்கம் அதாவது மனை யறத்தின் கலைவிளக்கம் 'நல்விருந்து' என்னுந் தலைப்பில் முன்னுஞ் சிறிது வந்தது. பின்னும் அதன் கொழுந்தழகை இங்கே காணலாம்.

மாதர் அகண்ட முருக நாம ஜப சங்கம்

பொள்ளாச்சி.

ஸ்ரீ என். எஸ். ராமச்சந்திர ஐயர்—ஆனைமலை ரோட்.

சிந்தையைச் சிவன்பாற் செலுத்துவதும், பிராணனை பரமாத்மாவில் லயிக்கச் செய்யும் பயிற்சிகளில் பழகுவதும் பரமனின் எல்லையற்ற மகிமையைப்பற்றி ஒருவருக் கொருவர் போதித்துக் கொள்வதும், சொற்பொழிவுகள் நிகழ்த்துவதும் அடியார் கூட்டங்கள் அகமகிழ்ந்து ஆற்றும் பணிகளாம். ஆகையினால், பக்தி மார்க்கத்திற்குப் பெயர் போன நம் தேசத்தில் பல விடங்களிலும் ஜப சங்கங்கள் தோன்றுவதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை; ஆயினும் நம் நாட்டுத் தாய்மார்கள் இத்தகைய வழிபாட்டில் ஈடுபடச் சங்கங்கள் அமைத்துக் கொண்டு முன்வருவதை அறிய அன்பர்கள் யாவரும் மட்டற்ற மகிழ்ச்சிக்கு ஆளா வார்கள் என்பதில் ஐயம் சிறிதுமில்லை.

சிந்தையையும் பிராணனையும் ஈசன்பாற் செலுத்த எளிய வழி ஜபம் செய்வதே யாகும். ஜபம் செய்தல்

வேடை கெட வந்து சிந்தனை மாயை யறவென்று,
துன்றிய வேதமுடிவின் பரம்பொருள் அருள்வாயே

உண்மையில் ஒரு வேள்வியே. யக்ஞங்களுக்குள் ஜப யக்ஞமாக கடவுள் விளங்குகின்றார்.

> மஹர்ஷீணாம் ப்ருகுரஹம்
> கிராமஸ்ம்யேக மக்ஷரம்
> யக்ஞானாம் ஜப யக்ஞோஸ்மி
> ஸ்தாவராணாம் ஹிமாலய:

எனப் பகவத்கீதையில் பத்தாவது அத்தியாயத்தில் இருபத்தைந்தாவது சுலோகம் கூறுகின்றது. ஜபம் செய்வதில் ஏக நாமோச்சாரணத்தைத் தான் பெரும்பாலும் கையாளப் பட்டுவருகிறது.

இஷ்ட தெய்வத்தைக் குறித்துள்ள மஹாமந்திரங்கள் அனைத்தும் அவைகளில் அடங்கியுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், ஷோடசி, மஹாஷோடசி முதலிய பெயர்களால் வழங்கப் பட்டு வருகின்றன. இம் மந்திரங்களெல்லாம் மனத்தை ஒருமைப்படுத்த உதவுகின்றன. மூன்றெழுத்தாலாகியதும், 'மு' என்பதனால் முகுந்தனையும், 'ரு' என்பதனால் ருத்ரனையும், 'க' என்பதனால் பிரமனையும் குறிக்கின்ற மூவர்மயமான முருக என்னும் மந்திரமும் அவைகளில் ஒன்று.

இப் புனிதமான மந்திரத்தை பக்தி சிரத்தையுடன் அகண்டமாய்ப் பன்னிரண்டு மணிநேரம் ஜபித்து வருவதற்குப் பொள்ளாச்சியென வழங்கும் பொருளாட்சி நகரத்தில் மாதர்களிடையில் ஒரு சங்கம் தோன்றியுள்ளது. இச் சங்கம் சென்ற தைமாதம், 24-1-'50ல் சுக்ல ஷஷ்டியன்று உதயமாயிற்று.

இதனை ஆரம்பித்த புண்யவதி திருமதி டி. எஸ். உண்ணாமலை அம்மாள் குருபக்தி, முருகபக்தி ஜீவ காருண்யம் முதலிய அருங்குணங்கள் வாய்ந்தவர். ஆலயம்

கலைமேவு ஞானப் பிரகாசக் கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதிற் பிறழாதே பதிஞான வாழ்வைத் தருவாயே

தொழுவதில் சிரத்தை மிகுந்தவர். லக்ஷ்மீ கடாக்ஷமும் வாய்க்கப்பெற்றவர். இடவசதி ஏராளமாயுள்ள தமது இல்லத்திலேயே இதனைப் பிரதிமாதமும் சுக்ல ஷஷ்டி திதியன்று நடத்திவர ஏற்பாடு செய்துள்ளார்.

அடியேன் சென்ற மாதத்திலும், இம்மாதம் 22-2-'50 லும் நடந்தேறிய இரு ஜபங்களையும் சிறிது பார்வையிட்டேன். முருகனை நன்கு பூசித்துக் கந்தரநுபூதியை ஓதிய பின் மாலை 7-மணிக்கு அகண்ட முருக நாம ஜபம் ஆரம்பமாயிற்று. தாள வாத்தியங்கள் ஒன்றும் கிடையாது. ஒரே தாரையாக ஜபம் மாலை 7-மணி வரையிலும் நீடித்திருந்தது. அங்கு கூடியிருந்த சுமார் முப்பது அன்னைமார்கள் மிக்க ஆர்வத்துடன் இனிய குரலில் "ஓம் முருக ஓம் முருக-முருக முருகய்யா" என்று பாடினது கேட்பவர் மனத்தைப் பரவசபடுத்தும் தன்மையதாக விளங்கிற்று. ஸ்ரீமதி கமலம்மாள் கந்தரநுபூதியிலுள்ள ஐம்பத்தொரு பாடல்களையும் முருக நாமாவளியுடன் இணைத்துப் பாடினது மிகவும் பக்தி ஜனகமாக இருந்தது.

கடைசியில் தீபாராதனை நடந்தேறியது. அவ்வேளை அனைவரும் சேர்ந்து,

"அன்னையும் தந்தையும் முருகன்றான்
ஆருயிர்த் தோழனும் முருகன்றான்
இதஞ்செயும் பந்துவும் முருகன்றான்
ஈடில் செல்வமும் முருகன்றான்
உயரிய வித்தையும் முருகன்றான்
ஊகமும் ஊக்கமும் முருகன்றான்
என்பொருள் யாவும் முருகன்றான்
ஏகபரம் பொருள் முருகன்றான்
ஐம்முகன் மாலயன் முருகன்றான்
ஒப்புயர் வற்றவன் முருகன்றான்
ஓமெழுத் தானவன் முருகன்றான்
ஔவுத மெல்லாம் முருகன்றான்"

சிவபுராண நூலிற் பயின்று
செறியு மாறுதானைப் பரிந்து தாவேனும்

என்று பாடி ஜபம்செய்த பலனை முருகனின் பாதாரவிந் தத்தில் கீழ்க்கண்ட செய்யுளைச் சொல்லி அர்ப்பணம் செய்தனர்.

மனமொழி மெய்க ளாலும்
வலிமிகு புலன்க ளாலும்

எனதறி வான்ம ஞானும்
இயற்கைவா ஸனையி ஞானும்

வினைபல புரிந்த தெல்லாம்
வீரவேற் பாணி யேவுன்

வனமிகும் திருப்ப தத்தே
வணக்கமோ டர்ப்பித் தேனே.

எல்லோரும் தண்டபாணியை ஸாஷ்டாங்கமாய்த் தண்ட னிட்டனர். திருமுருகன் பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு கலைந்தனர்.

திருமுருகன் நாமம் திசையெலாம் பரவுக!
அடியார் கூட்டம் அவனியில் ஓங்குக!
ஓம் தத்ஸத் ஸ்ரீ குமாரார்ப்பண மஸ்து.

உருவம்

(செ. பெ.)

உருவம் என்பது வடிவம் என்னும் பொருள்படும் ஒரு சொல். நாம் காண்பன வெல்லாம் உருவம். கேட் பனவும் உருவந்தான். இயற்கை உருவம், செயற்கை உரு வம் என இரண்டு வகை. இயற்கையோடியைந்த உருவம் பலதிறப் பட்டன. செயற்கையோ டியைந்ததும் பலதிறப் பட்டன. செயற்கை, இயற்கையை எட்டிப் பார்க்கிறது.

விபத்தை நீக்கி உன் அடியவருடன் எனை அமர்த்தி
ஆட்கொள மனதினில் அருள்செய்து கதிதனைத் தருவாயே

எங்கோ ஒன்று இயற்கைபோல் திகழுகிறது. எனவே உருவம் என்பது ஒப்பற்ற பொருள். உருவத்திற்கும், அழகிற்கும் மிகமிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. காண வெறுப்பாகும் உருவிலும் அழகு மிளிர்கிறது. ஆராய, அறிவுக்கு வேலைதர, சிந்திக்க உண்மை தெரியும். உருவப் படம், அழகு மிக்க உருவப்படம் அச்ச நினைவுகளை அகற்றும், துயரம் தெரித்து ஓடும், கண்ணீர் காய்ந்து விடும். ஆறுதலைத் தரும், அமைதியைத் தரும், இன்பத்தை பயக்கும்.

முதலில் இயற்கை உருவம் என்பதைப்பற்றி நினைத்துப் பார்ப்போம். இயற்கைக் காட்சிகள் என்பது ஒன்று. நாம் ஒரு கண்காட்சி உண்டாக்க வேண்டும். இயற்கை உருவம் ஒருபால். செயற்கை உருவமெல்லாம் ஒரு பக்கம் வைத்துக் கண்டால் இயல்பு தெரியும். பொழுது வெளுக்கிறது. பறவைகள் பாடி ஆடுகின்றன. விலங்குகள் இன்பம் அடைகின்றன; செடியிலும், கொடியிலும் செழுமை தோன்றுகிறது. களிறு பிடியின்பின் அசைந்து செல்கிறது. உழவர் காளைகளை ஓட்டிச் செல்லுகின்றனர், வயல்களுக்கு, காலைக் கதிரவன் எழுகிறான்.

ஒரு கொடி, அது சொல்கிறது. அப்பனே! உன்னைத் தழுவ என்னருகில் வரமாட்டாயா? என்று கெஞ்சுவது போலிருக்கிறது. 'வானமே' நான் வளர, நீ இடங்கொடு உன்னையும், மண்ணையும் நண்பு அடையச் செய்கிறேன்" என்று சொல்வதுபோல் வளர்கிறதாம் ஒரு மரம். 'பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு' கண்டார் புலவர். பெண்ணின் பெருமையை விலங்கினத்திலே, ஐயறிவுயிரிலே காண்கிறார். எடுத்துச் சொல்கிறார். ஆனால் கணவன் உண்டபின் மனைவி உண்ணுதல் மனித வாழ்வில் இயற்கை. நடப்பு முறை, உலகியல் நன்று நன்று! கணவன் எக்கேடு கெட்டாலென்ன? நாம் சாப்பிட்டு விடுவோம். அவன் வந்த

மகிழ்ந்து தோகையிற் புவிவலம் வருவோனே
வாக்தார விடிற் பிறரெவர் தருவாரே!

உடன் சாப்பிடட்டுமே என்று இருக்கின்ற காலமல்லவா இது! இருக்கலாம். காலத்தின் கோலத்தைக் காட்டவோ என்னவோ விலங்கு இனம் காட்டுகிறது. உள்ளொளி பரவியன்றே உருவம் திகழ்கிறது. புலவன் கண்டது இம் மட்டோடு நின்று விட்டது.

இதோ ஒரு உருவம்! அழகிய உருவம். இளமை நிரம்பிய அழகிய உருவம். கண்ணுக்கெதிரே தோன்று கிறது. காட்சி நெருங்குகிறது. மாட வீதி, காலையில் எழுந்தாள், நீராடினாள், தலை உலர்த்தி மலர் சொருகி மாடி மீது உலவுகிறாள். மனம் தூண்டியது, கீழே நோக்கினாள். அழகன் ஒருவன் மனம் தூண்ட, இவனும் மேல் நோக்கினான். கண்ணிணை கவ்வின கருத்தொரு மித்தன. அழகிய உருவம் உள்ளத்தை கொள்ளை கொள்ளுகிறது. மலையைப் பார்த்தான், அதை வணங்கினான் ஒருவன். கடலையும், வற்றா நதிகளையும் வணங்கினர் சிலர். பாட்டினால், உரையால் வணங்கினர். இயற்கை சென்றது. இயற்கைக் காட்சி முடிந்தது. இனி செயற்கைக் காட்சி வருகின்றது. ஓவியப் புலவன் ஓவியம் தீட்டினான். வரைதல், குடைதல், பாடல் இவைகளிலும் உருவம் உண்டு. வரைந்த உருவம், குடைந்த உருவம், பாட்டுருவம். இவற்றுள் பாட்டுருவம் அறிந்தோர் காணும் உருவம். செய்த உருவம் கண்டார் ஒருவர். பாடிவிட்டார். 'என்று வந்தாய் என்னும் எம் பெருமான்றன் திருக்குறிப்பே' என்று. கற்பனை பண்ணினார் ஒருவர். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாய், முல்லைச் சிரிப்பு, எடுத்த பொற்பாதம், பனித்த சடை, என்றிவ்வாறு கற்பனை செய்கிறார். முழு அழகும் நிரம்பிய உருவம் எங்கேயோ ஒன்று. அதற்கு ஒரு சக்தி உண்டு. எட்டிக்குடி அதற்கு எடுத்துக் காட்டாகும். அந்த ஊர் காரணப் பெயர் கொண்டது. தமிழ்நாட்டு ஊர்களில் காரணப் பெயரின்றி வருவது சில. காரணம் பற்றி வரு

அறிவையறிந் தப்பற் றதனிஞெடுஞ் சற்றுற்று
அருள் வசனங் கிட்டப் பெறலாமோ

வது பலவாகும். தொன்று தொட்டு கிராமத்தில் வழங்கி வரும் கதை ஒன்றுண்டு. சிற்பம் செய்கிறான் சிற்பி. மயில், அதன் மேல் முருகன்; மயிலின் கால் சுண்டு விரலளவுள்ளது. முழு அழகும் பெற்றதால் பறந்தது. எட்டிப் பிடித்தான் சிற்பி. எட்டிச்செடி வளர்ந்ததால் வந்த பெயராகவும் இருக்கலாம். கண்ணகி மனித உருவாய் வாய்ந்தாள். இன்று கல்லுருவாய் நின்றாள். அதுவும் ஆங்கில நாட்டிலே உள்ள லண்டன் பொருட் காட்சி சாலையில். உலக மக்களைக் கவரும் மோகன உருவம் வடசீனாவிலே ஒன்றிருக்கிறது. மாமல்லபுரம் சிற்பங்களுக்குப் பெயர் போனது. புதுக்கோட்டையில் நாரத்தமலை, சித்தன்னவாசலில் உள்ள ஓவியம் சிறப்புப் பெற்றது. இன்று எழுதப்பட்ட உருவம் போலவே நிலை பெற்று விளங்குகிறது.

இனிப் பாட்டுருவம், புலவன் தன் பாட்டிலே உருவமாக்கிப் பாடுவது. காலத்தையும், வளப்பத்தையும் பொறுத்தது. புலவனைப் பற்றியறிய மனநூல் வல்லான் ஒருவனும், பழங்கால வரலாறுகளை ஆராயும் ஒருவனும் சேர்ந்து ஓய்ந்து ஆய்ந்திடின் ஓரளவு உண்மை விளங்கும்.

இனி கேட்கும் உருவம், 'அ' என்று சொன்னால் அதன் உருவம் நம் மனத்தில் தோன்றுகிறது. ஞாபகார்த்த விழாக்களில், அவ்வவரின் உருவம் நம் மனதில் தோன்றுகிறது. அழகிற் சிறந்த உருவினையே முருகன் என்றனர். உருவம் ஒரு கலை. அது ஒப்பற்றது. உருவத்திற்கு உயர்வுதர வேண்டும். உருவம் வளர்க! உருவம் வாழ்க!

நிட்க ராதிகண் முற்பு காதினி

நீயே தாயாய் நாயேன் மாயா தருள்வாயே

ஸ்ரீ குமரகுருபரர் அருளிய

கந்தர் கலிவெண்பா

(குகபக்த ரசபதி)

எஞ்சாத

"பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்
இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராத சார்வதுபோல்—முந்தும்
கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரணம்
ஆகவரும் இச்சை அறிவு இயற்றலால் இலயப்
போக அதிகாரப் பொருளாகி—ஏகத்து
உருவும் அருவும் உருவருவ மாகிப்
பருவ வடிவம் பலவாய்"

(பூரணம்—நிறைவு. போக்கு-இறப்பு. வரவு-பிறப்பு. புணர்வு-இருப்பு. திரிகரணம்--மனம், வாக்கு, காயம். ஆகவரும் - போல அமைந்த. இச்சை — இச்சா சத்தி. அறிவு-ஞான சத்தி. இயற்றல்-கிரியா சத்தி. இலயம்-ஒடுக்கம். போகம்—காப்பு. அதிகாரம்-படைப்பின் விரிவு. ஏகம்-ஒன்று).

என்றும் எவர்க்கும் திருப்தியிருப்பதில்லை. வாழ்க்கையில் குறையொன்றே காண்பர் மாக்கள். குறையும் நிறையும் கொள்வர் மக்கள். நிறைவு ஒன்றையே காண்பன் நிமலன்.

எத்துணை மழை பெய்தாலும் நிரம்பாத ஏரிபோல், நிறைவிலாத மனத்தால், எதனிலும் குறைகண்டு குறைந்தே

தீராப் பிணிதீர சிவாத் துமஞான
ஊராட் சியதான ஓர்வாக் கருள்வாயே

போவது ஜீவ சுபாவம். இதனால், உடல் பலம், மனோபலம், ஆத்மபலம் முறையே குறைந்து நிரைந்து இறக்கின்றார்; மீட்டும் பிறக்கின்றார். இருக்கும் நாள்வரை, நிறைவுகாண அறியாது வருந்தி யிருக்கின்றார்; இறக்கின்றார். பிறப்பும் இறப்பும் இங்ஙனம் பெருகிக் கொண்டே போகின்றன.

இறப்பும் பிறப்பும் இல்லாத இறைவன், நிறைவாகி யெங்கும் நிற்கின்றான். எல்லையிட்ட பொருளான எவற்றிலும், அவ்வப்பொருள் அளவாகக் கூடியுளன் அகண்ட வியாபக அந்த அமலன். இதனை,

'வானாய் நிலனாய் கடலானாய் மலையானாய்,

என்றும்,

'கள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே'

என்றும் பாடுகின்றார், பரவையிலும் சங்கிலியிடத்தும் பரத்தையே கண்ட சுந்தரர்.

தொடக்குறாத எப்பொருளிலும் தோய்ந்துள அப் பெரிய பொருட்குப் பிரமமென்று பேரிடுகிறது ஏதமிலாத வேதம்.

உயிர்களின் இறப்பிற்கும் பிறப்பிற்கும் காரணமா யுள்ளது கன்மம். கன்மம் கனக்கக் காரணமாயுளது மாயை. மயக்கும் மாயை விரிவடைய ஆதாரமாயுளது ஆணவம். இந்த மும்மலத்தாலும் முறை மறக்கும் உயிர்க் கூட்டம். இன்பவடிவ இறைவனுக்கு இம் மும்மலமும் இல்லை. அவன் அநாதிமல முத்தன். கடந்துள அக்கடவுளே உயிர்கட்குக் காப்பளிப்பது என்று உணர்கிறது உள்ளம்.

'எஞ்சாத பூரணமாய், நித்தமாய்ப்,
போக்கு வரவும், புணர்வும், காரணமும்
இல்லாக் கதி'

என்று கூறுவதில் தான் எவ்வளவு குதூகலம் பிறக்கிறது!

அக்கற வாய் பேசு சற்குரு நாதா
உன் அற்புத சீர்பாதம் மறவேனே

மோடி வித்தை வேறு; இந்திரசால வித்தை வேறு. மண்ணில் விண்ணவரைக் காட்டுவான். விண்ணில் மண்ணவரை விளங்க வைப்பான். மணலை யள்ளி சர்க்கரை யாக்குவான். வாயில் இடுவான், அது இனிக்கவும் செய்யும். கல்லிலே நார் உரிப்பான். மணலைக் கயிறுக்குவான். இந்திரசாலம் வல்லோன் இங்ஙன மெல்லாம் இயற்றுவன். அவ்வளவும் இன்மையில் நேர்விக்கும் உண்மை. வெறும் பொய்த்தோற்றம். அவைகளைக் காணும் அனைவரும், அவை தம்மை மயக்கிக் காட்டும் வித்தையென அறியார். நெட்டுயிர்த்து வியப்படைவர். இந்த வித்தையையும் மெய்மை யாக்க முயல்கிறது இன்றைய விஞ்ஞானம். எனவே, இன்மையில் உண்மையும், உண்மையில் இன்மையும் வெளியாகிற செய்தியே ஒரு வியப்பல்லவா!

வித்தை செய்பவன் மட்டும், தன் செயல் வெறும் வித்தையென அறிவான். அதனால் மற்றவரை மயங்க வைத்துத் தான் மயங்கான். எனினும், அவன் பேச்சுமட்டும், ஆகா! அதோ பாருங்கள் தேவர்களை! அடாடா! இதோ பாருங்கள் இந்த அதிசயத்தை என்று விளம்பரிக்கும் அவன் மொழியும் பாவனையும், அவனும் அதை மெய்யென்று நம்பி யிருப்பவன் போலவே தோற்றும். இந்த நிலை சாராத சார்பு எனப்பெறும். அந்த இந்திரசால வித்தை செய்பவனைப்போலவே இறை செயலும் இருக்கிறது; பாருங்கள்!

'இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும், தந்திரத்தில் சாராது சார்வதுபோல்' என்றிதனைக் குறிப்பிடுகிறார் முனிவர். செடிக்கு ஆதாரம் வித்து. வித்திற்கு ஆதாரம் முளை; அதுபோல, உலகத் தோற்றத்திற்கு ஆதாரம் மாயை; மாயையின் இயக்கத்திற்கு ஆதாரம் அருள்முதல். எனவே, தனது தோற்றத்திற்கு ஒரு கரு

இழுக்க வந்திடு தூதர்கள் ஆனவர் பிடிக்கு முன்பு
உனதாள் மலராகிய இணைப் பதம்தா வரவேணும்

இல்லை: ஆயினும், எத் தோற்றத்திற்கும் கருவாயிருப்பவன் ஸ்கந்தன்!

மாயையின் உதவியால் உடல் பெறுவர் எவரும். இயல்பில் உருவம் இல்லாத இறைவன், உயிர்கள் தன்னை யறிந்து உய்தி யடைய, எதனையும் இயக்கும் தன் அருளையே திருமேனியாகத் தாங்குகிறான்.

'மூந்தும்
கருவின்றி நின்ற கருவாய்; அருளே
உருவின்றி நின்ற உருவாய்'

எனும் அடிகள், அற்புத அமலனை நாம் உணருமாறு ஊக்கு கின்றன அல்லவா!

மனம் கண்டத்தில் மன்னும். புத்தி முகத்தில் பொருந்தும். சித்தம் நாபியில் செறியும். அகங்காரம் இதயத்தில் அமரும். இந்த நாற் கரண நடுவிருந்து, அவைகளின் மூலம் ஆன்மா தன்னாட்சி நடத்தும்.

இந்த கரணங்களைப் போலவே விருப்பம், ஞானம், செயல் என்னும் மூன்று சத்திகளின் நடுவிருந்து, தன் ஆட்சி நடத்துகின்றான் தற்பரன். அந்த அருளாட்சியின் மூலம், உய்தி கருதி, உயிர்கட்கு உதவிய உடல், கரணம், புவனம் ஆகியவைகளைப் படைத்தல், காத்தல், ஒடுக்கம் முதலியன செய்கின்றான் மூல முதல்வன்.

சிலந்தி நூலைச் சிருட்டிக்கின்றது. மூலிகைகள் நிலத்தில் முளைக்கின்றன. மனிதன் மேனியில் எழுகின்றன மயிர்கள். அதுபோல், பேரிறைவன் இயல்பான சங்கற்பத்திலிருந்தே எவையும் பிறந்து இருந்து ஒடுங்குகின்றன.

சிலந்தியின் உயிர் நிமித்த காரணம். அதன் உடல் துணைக் காரணம். வலைக்கு நூல் முதற் காரணம். இவ்வுதாரணம், பிறவற்றிற்கும் பொருந்தும். இதனால், நிமித்த

மண்டிச் செச் சேயென வானவர்

கொஞ்சுற்றுத் தாழ்பத தாமரை மறவேனே

காரண சிவத்திலிருந்து அனைத்தும் தோன்றியிருந்து ஒடுங்கல், ஒருவாறு உணர இயல்கிறது. இவைகளை நினைப்பார் நெஞ்சம் நெகிழ்வது இயல்பு.

அருளால் இச்செயல் புரியும் அந்த ஆதி மூர்த்தி, படைப்பாதி நிகழ, பிரமன், திருமால், உருத்திரன், மகேசன் எனும் உருவத் திருமேனி கொள்கின்றான். சிவம், சத்தி, விந்து, நாதம் எனும் அருவத் திருமேனியாக அமைகின்றான்.

சதாசிவம் எனும் அருவத் திருமேனியில் அமர்கின்றான். அதனை,

'சிவம் சத்தி நாதம் விந்து; சதாசிவம்; திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்றான் மால் அயன்; ஒன்றின் ஒன்றாய்
பவந்தரும் அருவம் நான்கு; இங்கு உருவம் நான்கு;
உபயம் ஒன்றாம்
நவம்தரு பேதமாக நாதனே நடிப்பன்'

என்று அருள்நந்தி சிவம், சிவஞான சித்தியில் அகமகிழ்ந்து பாடுவதையும் பாருங்கள்.

அருவத்தை நிஷ்களம் எனவும், உருவத்தை சகளம் எனவும், அருவுருவை நிஷ்கள சகளம் எனவும் கூறுவதுண்டு. இவைகள் முறையே இலயம், அதிகாரம், போகம் எனும் நிலயங்கள். இவைகளிலிருந்து ஆட்சி நடத்தும் அமலன், இவைகட்கு அயலான சிவதத்துவ காரணமாம் பிரணவப் பெருவெளியாய் உளன். அவ்வெளியே, இலயம் அதிகாரம் போகம் எனும் மூன்றிற்கும் இடமாய், பரிக்கிரக சக்தியாய் நிற்றலின், எவ்வடிவன், எப்பெயரன், எவ்வூரன் இறைவன் என்று நம்மால் எண்ணவும் முடிவதில்லை.

அருவம் உருவம் அருவுருவம் ஆக அமைந்த ஒன்பது திருமேனிகளும், அந்த ஏக மூர்த்தியிலிருந்தே வெளிவருகின்றன.

"ஏகத்தி
உருவும் அருவும் உருவருவமாகி";

என்னும் அடிகள், எவ்வளவு செய்திகளைத் தன் இதயத்தில் தாங்கி நிற்கிறது! ஊன்றிப் பாருங்கள்.

இங்ஙனமெல்லாம் நாதாந்த நாடகம் நடத்துகின்ற நம்பன், மற்றும் பல அற்புதம் காட்டுகின்றானும்.

இறைவனை எண்ணுகின்ற உயிர்கள், தம் வினை நிலைக்கேற்ப பல மனம் படைத்தவர்கள். அதனால் கொள்கை வேறுபாடு கொண்டவர்கள். எனினும், பயன் கருதியேனும் இறைவனை வழிபடல் மறந்திலர். பக்குவ நிலைக்குத் தக்கபடி, அவர்கள் எதிரில் வந்து அருள, பல வடிவம் கொள்கின்றான் பரமன். அவைகளை, பருவ வடிவம் பல வாய் என்று பாடுகிறார் குமர குருபரர்.

இங்ஙனம் எண்ணிலாத் திருவுருவம் தாங்கி, எம்மான் செய்கின்ற பெருங்கருணைத் திறமனைத்தும், செயல் மறந்து சிந்துக்குமாறு முனிவர் கூறும் அழகிய பகுதிகளை அடுத்த இதழில் காண்பம்.

ஔவைப்பிராட்டியார்.

(ஸ்ரீ வத்ஸன்)

சென்ற சஞ்சிகையில் 'வாக்குண்டாம்' என்ற செய்யுளுக்கு உரையாக, மனம் செம்மையாக இருக்க வேண்டுமானால் சுத்தமான ஆகாரத்தை உட்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டது.

இனி ஆகாரம் எது, அதிலும் சுத்தமான ஆகாரம் எது, என்பதைக் கவனிப்போம்.

இவ்வுடலிலுள்ள ஜீவநிலையாகிய சூட்டுக்கு (Vital Fire) அற்பணம் செய்யப்படும் தாவரங்களினாலாகியதும்,

---

தவ செபமுந் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற் கருள்வாயே

ஒஷதிகள் : (Grown Food Stuff) இயற்கையில் வலுவைக் கொடுக்கக் கூடியதுமான பொருள்களே ஆகாரம் எனப்படும். இஃது முறையே சத்துக் குறைவுள்ளது சத்துள்ளது, அதிசத்துள்ளது என மூன்று வகைப்படும். சக்கைகள், சாறுகள் பிழியப் பட்ட கறி காய்கள், கஞ்சி வடிகட்டிய அன்னம் இவைகள் சத்துக்கள் குறைவானவையாகும். மேலே கண்ட சத்து ரூபமான சாறுகள் எடுபடாத வ்யஞ்ஜன மும், கஞ்சி எடுபடாத அன்னமும் மற்றும் பயிர் பச்சை களாலாகியவைகளும் சத்துள்ளவையாகும். சாத்விகத் தில் சிறந்ததும் எக்காலத்தும் எவ்வுயிர்கட்கும் உகந்ததும், இன்றியமையாததும், தெய்வீக ஆகாரமுமான பால் நிரம்ப சத்துப் பொருள்கள் அமையப் பெற்றதாகும் என்று யோகிகளுள் சிறந்த யாக்ஞவல்கியர் என்னும் முனிவர் கூறியுள்ளார்.

இத்தகைய ஆகாரமான 'பாலே' (பசும் பால்), எவ னொருவன் தானும் உட்கொண்டு, தான் வழிபடும் இறை வனுக்கும் அளிக்கிறானோ அவன் "சாவைக் கடப்பான்" என்றும் யாக்ஞவல்கிய மாமுனிவர் கூறுகிறார்.

மேலும்,

"இனி துண்பான் என்பான் உயிர் கொல்லாது உண் பான்" என்ற வாக்கியப்படியும், உயிர் கொல்லாத உணவே உணவாகும் என்றும், மற்றது அதாவது புலாலுண்ணல் முதலியவை வெறுக்கத்தக்க உணவு என்றும் ஏற்படுகிறது.

பிராட்டியாரும் இக்கருத்தை வெகு அழகாக "நோன்பு என்பது கொன்று தின்னாமை" என்கிறார். அதாவது இந்த ஜீவன் முத்தியடைய ஏற்படும் ஓர் விருப் பமே நோன்பு. அஃது ஈடேற ஆகார நியமம் அவசியம். அந்த ஆகாரம் மாமிசாதிகள் அற்றதாக இருத்தலே முறை எனச் சுருக்கமாகக் கூறி விட்டார்.

மந்த்ர ப்ரஸ்த்தார தரிசன யந்த்ரத்துக் கேள்வியலமலம்
வம்பிற் சுற்றூது பாகதி அருள்வாயே

நல்ல வாக்கு ஏற்பட வேண்டில், மனம் செம்மையா யிருக்க வேண்டும் என்றும், மனம் செம்மையாயிருக்க சுத்த சாத்விக ஆகாரம் அவசியம் என்றும், அத்தகைய சுத்த ஆகாரத்தினை உட்கொண்டால் இவ்வுடல் இராம லிங்க சுவாமிகள் கூறியதுபோல் சுத்த பரிசுத்த சரீரம் ஆகும் என்றும் தெரிகிறது.

இத்தகைய நிலை ஏற்பட்டபின் மாமலராள் நோக்கு ஏற்படாது தடை. இங்கு மாமலராள் நோக்கு என்பது கேவலம் (ஐசுவரியம்) பொருளைக் குறிக்காது. ஐசுவரிய வான் ஈசன். அவர் அழிவற்றவர். ஒருவனது உடல் கெடாமலும், அஃது அழியாமலும் இருப்பதே அவன் வேண்டும் பொருட்களுள் தலை சிறந்ததாகும். மேலும் நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம், என்ற பிராட்டி யார் வாககுப்படி இத்தகைய பொருளைக் காட்டிலும், அதாவது ஒருவர்க்குத் தனது ஆயுளைக் காட்டிலும் மேலான தேவைதான் யாதுளது? ஆகவே அங்கிலையில் அவரது மேனி நுடங்காது, அதாவது அவரது சரீரம் வாடாது, நரை திரைக் குட்படாது; காய கற்ப சரீரத்தை ஒத்த தாகும் என்று கூறுகிறார் பிராட்டியார்.

சாத்விக ஆகாரத்தை உட்கொள்ளும் நிமித்தம் குடல் பரிசுத்த மடைந்து, அதனின்றும் சரீரம், சுத்த பரிசுத்த சரீரம் ஆகி, அதனின்று மனமும் செம்மை யடைந்து, வாக்கு எற்படும் கருவிகளும தூய்மை அடைவதுடன், புறப்படும் வாக்கும் தெய்வீக வாக்கை யொக்கும், என் னும் இத்துணை அரிய செயல்களையும் ஓர் பக்தியில் ஈடுபட்டு அதின்கண் ஸ்ரீ மூல கணபதியை வேண்டினால் அடைந்து விட முடியும் என்று நூல உரையாகவே, கூறலாம். அதாவது பக்தியோக மார்க்கத்தை அனுசரித்ததாகக் கூறலாம்.

சுந்தர மதாக எந்தன் வினை யேக
சிந்தை களிகூர அருள்வாயே

ஆனால் பக்தர்களுள் சிறந்தவர்கள்கூட நோய்வாய்க் குட்பட்டு வருந்தியுள்ளார் என்று சில நூல்கள் வாயிலாக அறிகிறோம், இது முறையா! இதற்குப் பரிகாரம் கூறும் வகையில், யாவும் விதிவசம் என்று கூறுவர் சிலர். ஆனால் பிராட்டியாரின் கருத்து அதுவல்ல.

மேலே கூறியபடி மனிதன் நோய்வாய்க் குட்படல் விதிவசமே யெனில், அந்நோய் தீரச் சிகிச்சை செய்வது தான் யாது காரணம் பற்றியோ? ஐந்தாவது வேதமெனும் ஆயுள்வேத நூல்களுள், நோய்கள் முறையையும் அவைதீர அவுடதங்களையும் மகாமுனிவர்கள் கூறியுள்ளதுதான் ஏனோ?

"ஆன பாவிகள் அடைவன நரகங்கள், அவசிய மானாலும் தான, மந்திர, விரத, ஹோம யாகங்களால் தவறும் என்பது பொய்யோ" என்ற கைவல்லியக்காரர் வசனப்படி யாதும் விதி, விதி என்றால், பிராயச்சித்த நூல் என்ன? (Repentance and good action for evil done) மந்திர சாஸ்திரங்கள் என்ன, நோன்புகள் என்ன, யாகங்கள் முதலிய கர்மாக்களை அறநூல்கள் கூறுவதின் கருத்துத்தான் யாதோ?

ஆகவே பக்தி முறையையும், அதன் பயனையும் ஒருவாறு பிராட்டியார் கூறினதாகத் தோன்றினாலும், "விதியையும் மதியினால் வெல்லலாம்" என்ற கொள்கைப்படி இந்த உடல் நோய்வாய்க் குட்படாமலும், உட்படின் அவற்றைத் தவிர்த்தும், இவ்வுடலின் கண் உள்ள முக்கிய உறுப்பாகிய வாயும், குடலும் அவற்றைச் சார்ந்த கருவிகளும் நோயின்றி இருக்கும் முறைகளையும் அத்துடன் இச்சரீரம் வாடாமலும், நரை திரை அடையாமலும், இருக்கும் முறைகளையும், வைத்தியம், கற்ப முறைகள், யோகம், ஞானம், இவற்றில் சிறந்து விளங்கும் பிராட்டியார், இச்

நண்புறெனை யின்று நன்றில்வினை கொன்று
நன்று மயில் தின்றி வரவேணும்

செய்யுளிலேயே சூக்குமக் கருத்தாக அமைத்துக் கூறியிருக்கிறார்.

தப்பார் திருமேனி தம்பிக் கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

என்னும் இப்பதங்களில் கண்டுள்ள மூலிகை வர்க்கங்களை எவர்கள் முறையோடு கைபாகம், செய்பாகம் தவறாமல் தயார் செய்து உட்கொள்ளுகிறார்களோ அவர்களது தொண்டை கம்மாது, அதைச் சார்ந்த பாகங்கள் நோயையடையாது, குடல் பரிசுத்த மடையும். மேலும் அதே மூலிகைகளை முறைப்படி "மூப்பு"ச் சேர்த்து உட்கொண்டால் சரீரம் காயகல்ப சரீரம் ஆகும், ஆக்கைக் கழிவு ஏற்படாது. அத்தகையோர் புனிதவான்கள் ஆவர்—என்ற தான இத்தகைய உண்மையான மார்க்கத்தை இச்செய்யுள் மூலமாக பிராட்டியார் அறிவித்துள்ளார். என்னே இவர் பெருமை!

நிற்க, மேலே கண்டுள்ள சூக்குமக் கருத்தை வாழையடி வாழையாக குருநாதன் முன்னிலையில் அறிந்து அவ்வாறே ஒழுகல் முறையே யெனினும், நமது "அமிருத வசனி" சஞ்சிகையைக் கண்ணுறுபவர்கள் இறைவனது தொண்டில் ஈடுபடுபவர்களேயாவர் எனத் தெளிந்து, ஒருவாறு இங்கு கூறலானோம். மேலும் இதன் அந்தரங்க விபரங்களையும் கைபாகம், செய்பாகம் முதலியவற்றையும் தக்கதொரு ஆசானை யடைந்து அவாவுள்ளவர்கள் அறிந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஆதியில் நாம் கூறியதுபோல, பிராட்டியார் செய்துள்ள ஒவ்வொரு நூலும், ஒவ்வொரு சொல்லும் ஆழ்ந்த கருத்துக்கள் அமையப் பெற்றவை என்பதற்கு இச்செய்யுள் ஒன்றே போதுமானது. இதிலிருந்தே அவரது ஒப்பற்ற திறமை, அறிவு, ஆன்ம ஞானம், ஜீவகாருண்யம் முதலியவை ஒருவாறு தெரிகிறது.

மனமுற வாழத் திருமணி மார்பத்
தருள் முருகாவுற் றிணைவாயே

மேலும், இப் பிராட்டியார் பாடியுள்ள "ஞானக் குறள்" ஒருமிக்க, ஞானம், யோகம் இவற்றைப் பற்றிக் கூறுவதால் அவற்றினை தக்க ஆசான் மூலமாக நண்பர்கள் கேட்டறிந்து கொளல் முறையாகும்.

ஔவைப் பிராட்டியாரின் குணாதிசயங்களைப் பற்றியும் அவர் தமிழர்க்குப் பாடித் தந்துள்ள சில செய்யுட்களைப்பற்றியும் அறிந்த மட்டில் இந்த சஞ்சிகையின் வாயிலாகத் தொடர்ந்து வெளியிட்டுள்ளோம்.

இவற்றினை அன்பு கூர்ந்து பதிப்பித்து வெளியிட்ட நமது "அமிருத வசனி" ஆசிரியருக்கு நமது நன்றியைத் தெரிவித்து அழிவற்ற பிராட்டியாருக்குச் சரணம் சொல்லி, நேயர்கள் பிராட்டியாரின் இதய உள்ளத்தையும் அவரது அரிய மொழிகளையும் கற்று, ஆன்ம லாபமடையுமாறு வேண்டுகின்றனம்.

பிராட்டியார் பொன்னடிகளே சரணம்; சுபம்.

எங்கே காணலாம்

மு. பொ. வேதாந்த பாடசாலை

[புவனகிரி]

சுயம்பிரகாச சொரூப முருகனது லீலாவிநோதக் காட்சியின் அழகை எங்கே காணலாமெனின் அங்கிங்கெனாது எங்குமே காணலாம். ஆயினும் முருகன் அருள் மலிந்திலகும் அடியவர் பால் பிரத்யட்சமாகக் காணலாம் அனைவரும்- எப்படியெனின்?

அடியார்களது திருமேனி முழுவதும் பூரணமாய் ஒளிர்வது முருகப்பெருமானுடைய அழகாய அமிர்தமே. அவ் வழகமிர்தமோ, காண்பவர்களுடைய கண்களுக்கு

வயலி நகரியில் அருள்பெற மயில்மிசை யுதவு பரிமள
மதுகர வெகுவித வனச மலரடி கனவிலு நனவிலு மறவேனே

சுவைமிகும் விருந்தாகும். அடியவர் வாக்கினின்றெழும் இன்சொலோ கேட்பவர் செவிக் கமிர்தமாகும். அடிகளது திருவடிகளோ பணிந்து வணங்குமன்பர்கள் சிரமிலிரும் சிரோரத்தினமாகிச் சர்வபாவநாச காரண மாகும்.

அடியவர்களது திருமேனியோ? முருகனது பணி யொன்றையே செய்யும், வேறுசெய்யா. அவரது வாக்கும் முருகன் புகழ் மொழி பல புகன்று பாடித்துதி செய்யும். கண்களிரண்டும் முருகன் காட்சி யழகையள்ளும். செவியோ? முருகன் புகழ்மலிந்த இன்சொல்லே கேட் டின்புறும். மனமோ? முருகனருளிற் கலந்துருகி யருள் வடிவேயாம் ஜீவபோதமோ? முருகன் கருணைவெள்ளம் படிந்து சீதளமாகும். அவரது அறிவோ? முருகனது அழகில் அளவளாவும். அவரது உண்மை வடிவ ஆன் மாவோ? முருகனில் ஐக்கியமாகி முருகனது ஸ்வரூபமே யாகிவிடும்.

இப்பெருமை வாய்ந்த அடியார்களே முருகன் அழ கினைப் பூரணமா யறிந்து அனுபவிப்பவராவர். இவரிடம் முருகன் காட்சியழகினை முழுதுங் காணலாம். இவர்களே ஞானியராவார். இனி யோகிகளிடம் ஜீவ சம்பந்தமாகி ஒளிரும் கிரியை யாளரிடம், மனதின்கண் மந்திரவடிவமாக ஓர் சிறிதொளிரும். சரியை யாளரிடத்தோ? முருகனது அழகின் சாயை மாத்திரம் பிரதிபலிக்கும். சாதாரண மக்களிடம் நிறைந்திருப்பினும் சுவரில் வெளிபோல் மறைந் தொளிரும்.

அன்பர்களது சரியையில் சட வடிவமாயும், கிரியை யில் மந்திர வடிவமாகி அருகிலும், யோகத்தில் உள்ளொளி யாயும், ஞானத்தில் தன்மயமாயும் முருகன் காட்சியருளு கிறான்.

துவயலி நின்றன வ்யாத்தமும் வயலியல் வஞ்சியில் மேற்பயில்
சொருபமு நெஞ்சிலி ராப்பகல் மறவேனே

பெருமானை பல அறிஞர்கள் பக்தியாம் அன்புததும்பி பாடித் துதிசெய்வார். அதைச் சில அன்பர்கள் செவிக் கினிதாக கேட்டின்புறுவர். முருகனுருவச் சிலா ரூப அழகை மக்கள் பலரும் கண்குளிரக் கண்டு மகிழ்ந் தின்புறுவர். பின் மனத்து நினைத்து ஆனந்திப்பர். சிலர் முருகனின் அழகைக் குறித்து மனவொருமையாய்த் தியானிப்பர். சிலர் முருகன் மந்திரங்களை வாக்கினாலும், மனத்தாலுஞ் செபித் துவகை பெறுவர். சிலர் அருவக் காட்சியைத் தியானிப்பர். சிலர் முருகனுடைய சாட்சாத் காரத்தை அடைதற்கு சமாதி புரிவர், எங்கோ ஒருவர் முருகன் அருளனுபவமுறுவர். திரிவித வுலகில் அரிதொரு ஞானியென, ஒருவன் முருகனிலை ஐக்கிய பாவம் அடைவன். சிலர் பிரத்தியட்சமாகிக் காட்சியளிக்க வேண்டித் தவமியற்றுவர். ஆனால்,

நாம் எப்படி எப்படியிருக்கிறோமோ? அப்படியப்படி யே முருகன் காட்சி தருகிறார். எப்படியெனின்?

நாம் உருவ வடிவதேகமானால், முருகன் விக்கிரக வடிவில் காட்சி அளிப்பர். நாம் இந்திரிய வடிவமானால், முருகன் சத்தாதி விடயங்களில் காட்சி தருகிறார். நாம் மனோ வடிவமானால், முருகன் சாயை வடிவில் காட்சி புரிவர். நாம் ஜீவபோத வடிவானால், முருகன் வாசனாமயபாழில் ஒளிர்வர். நாம் சாக்ஷியறிவானால், முருகன் அகண்ட அறிவிலிலகுவர். நாம் ஆனந்தமானால், முருகன் பரிபூரணானந்தக் காட்சியாவர். நாம் ஞானலய மோனமானால் முருகன் நமதனுபவமாயிருப்பர். நாம் மோனாதீதமா யமைய, முருகனை யிரண் டறக் கலந்து ஏகமாவோம்.

முருகன், சராசரமாய சர்வ உயிர்களுக்கு முயிராய் அவரவர் நிச்சயபாராய் பரோக்ஷ ஞானஸ்வரூபராயும், சமாதியில் அபரோக்ஷ ஞானஸ்வரூபராயும், சகசத்தில் அனுபவ வடிவ சீவன் முத்த சொரூபராயும், சாக்ஷாத் காரதிசையில்

கட்டமுபக்தி அநுபவம் விட்டவிடற்கு நியமித
கற்பனை பக்ஷமுடனளித்து அருளாதோ

அநுபூதிவடிவ விதேக முத்த ஆனந்த சொரூபமாயும், அதீதத்தில் நித்திய நிரதிசயானந்த கெம்பீரமாய் உண்மை வடிவ முருகனாக விளங்குகிறார்.

ஆகையால் நாம் நமது முருகனுதனை, உபசாந்த முருகனை, தற்சாக்ஷி முருகனை, பிரமானந்த முருகனை பரிபூரணமாய் முருகனை, சிவவடிவ முருகனை, யெல்லாமாய் அல்லவுமாய் யெங்கு நிறைந்த முருகனை பரமாத்மாவான முருகனை அமிர்தவசனியில் ஆனந்தமாயுலவு முருகனை, எங்குங் காணலாம், நினைக்கலாம், அறியலாம், அநுபவிக்கலாம், அநுபூதி யாகலாம், முருகனின் சுயஞ்சோதி மயமாகிலேத்து நிரதிசயா னந்தமாய நிலைமை யுறலாம்.

ஓர் விஷயத்தில் முருகனது விளக்கம் வருமாறுணர்தல் முருகன் ஞெப்திப்பிரிய வடிவமாய் எங்குமிலகுகிறான். ஞெப்தி எனல் அறிவு, பிரிய மெனல் இன்பமாகும். உலகில் பல விடயங்களிலும் முருகன் இலகினும் ஏதாவது ஓர் விடயத்தில், (பானைச் சோற்றில் ஓர் பருக்கை பதம் பார்ப்பது போல்), பார்க்கின் சர்வத்திலும் பார்த்தது போலாம்.

விடயம் பலவினும் மிகவெளிது அறிதற்கு ஸ்திரீவிடயமேயாகும். இதிற்காண்பாம். அறிதல் அறிவு, தோன்றல் இன்பம். ஆண் அறிவாக பெண் இன்பாகும். பெண் அறிவாக, ஆண் இன்பாகும்.

இருவர் சரீரமும் ஒருவரை யொருவர் பார்க்கும்போது பிரியவடிவமாகத் தோற்றும் இங்கே அறிதல் தோன்றுதலிரண்டையும் சாக்ஷியா நின்று விளக்கி வைப்பது முருகன் பிரகாசமாகும்,

அப்பால் இருவரும் மனத்து நினைக்கின்றனர். இருவர் நினைவிற்கும் சாக்ஷியாக முருகன் பிரகாசிக்கிறார்.

எத்திற் கொடுகின தாரடி யாரொடு முய்த்திட்டு
உனதருளால் உயர்ஞானமு மிட்டுத் திருவடியாமுயர்
வாழ்வுற இனிதாள்வாய்

அப்பால் இருவர் அறிவில் அறிதல் தோன்றுதல் நிகழ அங்கும் முருகன் மத்தியகதமாகப் பிரகாசந் தருகின்றனர்.

அப்பால் இருவர் தேகம், மனம், அறிவு லயமாய் இருவர் இன்பமும் ஏகமாகி க்ஷணம் சிற்றின்ப அனுபவ மாகும் யிங்குய அனுபவம் அனுபவியாய உண்மை துவைத மாயதை முருகன் சாக்ஷியாயிருந்து விளக்குகிறார். ஆகை யால் சுயம்பிரகாச முருகனை யிருவர் சரீரத்தும், கண்ணி னும், மனத்தினும், அறிவினும் அனுபவத்தினும் நிறைந்து விளங்குவதுபோல் எங்கும் எல்லாவிடயத்தினும் முருகன் சதோதயமாய்ப் பிரகாசிப்பதால் தலைப்பிற் கூறியபடி எங்கே காணலாமென்ற வினவுக்கு எங்குங்காணலா மென்பதே விடையாம்.

இரத்தினப் பரிக்ஷையுடையவன்போல் முருகன் உண்மை வடிவை, குருவின் அருள் பெற்றோன் காண்பன்

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

11-ஆம் பை

V. S. வேங்கடராமன்.

" ஆய்ச்சியர் அன்பும் பெருமையும் "

(உ) ஓரிடைச்சியின் வீட்டில் கண்ணன் நுழைந்தார். அவ்விடைச்சி குறும்புக்காக நீ யார்? என்று கேட்டாள்.

கண்ணன் :—பலராமன் தம்பி நான் என்று பதில் சொன்னார்.

இடைச்சி :—இங்கே என்னடா உனக்கு என்று கேட் டாள்.

பதி பாவனையுற்று அநுபூதியில் அப்படியே
அடைவித்து அருள்வாயே

கண்ணன் :—என் வீடு மாதிரி இருந்தது வந்தேனென்று சொல்லிக்கொண்டே அங்கிருந்து உள்ளே இருந்த வெண்ணெய்ச் சட்டியில் கையை விட்டார்.

இடைச்சி:—அது சரிதான்; வெண்ணெய்ச் சட்டியில் ஏன் கையை விட்டாய் என்று கேட்டாள்.

கண்ணன் :—அம்மா! ஒரு வெள்ளைக் கன்றுக் குட்டியைக் காணோம். வெண்ணெய்ச் சட்டிக்குள் கன்றுக் குட்டி ஓடிப்போச்சோ என்னவோ. தேடவேண்டாமா? கவலைப்படாதே. ஒரு நிமிஷம் தயவுபண்ணு என்றார். (அதற்குள் வெண்ணெய்ப் பலகாரம் முடிந்தது. இடைச்சியும் சிரித்துவிட்டாள். தம்மிடத்துப் பிறர் அன்பு கொள்ளச் செய்வதும் தம்முடைய வேலையாகவன்றே கண்ணன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

(ஊ) கண்ணன் தானினைத்தால் அவ்விடைச்சியர்க்குக் கோபமும் மூட்டுவார். ஒரு சமயத்தில் ஒருத்தியின் வீட்டில் கண்ணன் வெண்ணெயைத் திருடிக்கொண்டிருந்தார். அவ்வீட்டு இடைச்சி பார்த்ததும் கண்ணனை வீட்டுக்குள் வைத்துக் கதவைப் பூட்டிக் கொண்டு யசோதையினிடம் சொல்லப் போனாள். அங்கே யசோதை வீட்டில் உரலில் கட்டுண்ட கண்ணனைப் பார்த்ததும், சொல்ல வந்தோமே; இங்கு முளானே, என்று தம்பித்து நின்றுவிட்டாள். மகிழ்ச்சி தாங்காது சிரித்தும்விட்டாள்.

(எ) அந்தக் கார்முகில் மேனியும், கல் கல்லெனுந் தண்டையுஞ் சிலம்பும், நெற்றியில் உச்சிப்பூவும், இடுப்பில் கச்சைமணி அரைஞாணும், கழுத்தில் புலிநகத் தொங்கட்டமும் கொண்டதாக ஓரிந்திர நீலமணி தேவகியின் திருவயிற்றுச சுரங்கத்தில் தோன்றப் பசுக்களைக் காக்கும் நந்தரால் தன் புதல்வியே விலையாக வசுதேவருக்குக் கொடுத்து அவரிடமிருந்து வாங்கப்பெற அவ்வாய ரினமாகிய முத்து

மதியால் வித்தகனாகி மனதால் உத்தமனாகிப
பதிவாகிச் சிவஞான பரயோகத் தருள்வாயே

மாலைக்குப் பதக்கமாக, அவ்வாய் மகளிரருங்கலமாக உச்சி முதல் உள்ளங்கால் வரை முனிவர்களின் உள்ளங்களால் பருகப் பெறுவதும், அக்கோபிமார்களால் அறியப்பட்ட இன்பச்சுவை கொண்டதும் ஆன அக்கோபால பூபால குமாரமூர்த்தியல்லாமல் வேறுயார் அப்பசுக்கள் முக்தி யடையவும், அவ்விடையரும் வீடுபெறவும், அக் கோபி மாரும் பிரமானந்தம் பெறவும் செய்ய வல்லமை கொண்டார்கள். ஸ்ரீமந் நாராயணனுடைய மற்ற அவதாரங்களெல்லாம் இருக்கட்டுமே. அவைகள் எல்லா வகைகளிலும் நல்லவைகள் தாம். அந்தச் செந்தாமரைக் கண்ணனான பாலகிருஷ்ணன் ஒருவனும், அந்தக் கோபிமாரடியார் அடித்துகள் ஒன்றும், ஆக இந்த இரண்டும் அடிக்கடி என் மனம் மயங்கியபோதுங்கூடத் தோன்ற வேண்டும் என்று ஸ்ரீ லீலாசுக யோகீந்திரர் கூறுவரானல் அடியாரடியார்களான அக்கோபிமார்களின் பெருமையை ஆரே நுவல வல்லவராவார்.

(ஏ) இப்படிப் பகவான் கோ கோப கோபிகா ரமணராகத் தன் தோழரோடு விளையாடிக் கொண்டிருக்கும் போது கண்ணன் தனக்கு வெண்ணெயில் பங்குதராத காரணமாக ஒரு சில மாணவர், பகவான் மண்ணின் சுவையறியவந்திருப்பதனல் மண்பூதத்தின்—பூமிதேவியின் அதரச் சுவையை அறிபவர் போல் மண்ணைத்தின்ன, அது கண்டதும் (அப்பொறுமை கொண்ட மாணவர்) அன்னை யசோதாவிடஞ் சென்று கண்ணன் மண்ணைத் தின்றான் என்று தெரிவித்தனர். குழந்தை வயிற்றில் மண் போய் விட்டால் வயிறு வலிக்குமே குழந்தைக்கு! எத்தனை மண் தின்றானே ஐயன்! என்று பயந்து கண்ணனைப் பார்த்து அதட்டிப் பேசத் தொடங்கினாள்.

ஏனடா! தெரியாமல் நீ மண்ணைத்தின்கிறாய். இனி மண்ணைத் தின்றால் பார். உன்னை என்ன செய்கிறேன்.

சக்ரதர அரி மருகா முருகா
ரத்ந பரிபுர இருகால் ஒருகால் மறவேனே

உன் தோழர்கள் சொல்கிருர்களே. உன் அண்ணன் பலராமன் கூடச் சொல்கிருனே என்ருள்.

அதற்குக் கண்ணன் "நான் மண்ணைத்தின்னவே யில்லையே. இவர்கள் பொய் சொல்லுகிருர்கள். இவர்கள் உண்மையைச் சொல்லியிருந்தால் என்வாய்ப் பற்களில் மண் ஒட்டிக் கொண்டிருக்குமே; நாக்கினிலுங் காணுமே. பார் என் வாயை. அம்மா பாரேன் என்று சொல்லிக் கொண்டே தம் வாயைத் திறந்தார். விசுவரூப தரிசன பாக்கியம் கிடைத்தது யசோதைக்கு. யாருக்கு அது கிட்டும். ஒரு பால் மலைகள், மற்ருெருபால் கடல்கள், பிறிதொரு பால்தீவுகள், வேருெருபால் ஆகாயம் என்றிங்ஙனமே வாயுமண்டலம் அக்கினிமண்டலம் சந்திரமண்டலம் நக்ஷத்திரங்கள், சோதி வட்டம், நீர், நெருப்பு, பலவாய்கள், பலகண்கள், பலகைகள், பலகால்கள், பல வயிறுகள். ஏகாதசருத்திரர் துவாத சாதித்தர், அஷ்ட வசுக்கள், சாத்தியர், விசுவேதேவர் அசுவினீகுமாரர், மருத்துக்கள், பித்ருக்கள், கந்தருவர், யக்ஷர் அசுரர், சித்தர், சாரணர் என்ற எல்லாமுமாக

"வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே"

என்னும்படி கண்டு எல்லாம் பகவானுடைய மாயைகள் என்று யசோதை உண்மை உணர்ந்தின்புறு மளவில், பகவான் புத்திர ஸ்நேஹமான வைஷ்ணவ மாயை வலையை வீசினர். உடனே யசோதையும் அம்மாயையிற் சிக்கி முன் போலவே குழந்தைக்கு மண் ஒன்றுஞ் செய்யா திருக்கவேண்டுமே என்று பிரார்த்தித்துக் கொண்டே கண்ணனை மடியிலமர்த்திக் கொண்டாள். வேதோபநிஷத் சாங்கிய யோகங்களால் போற்றப் பெறும் பெருமை கொண்ட ஸ்ரீ ஹரியை அந்த யசோதை அம்மாயையால் தன் வயிற்றினின் றுதித்த குழந்தையாகவே மயங்கி எண்ணி மகிழ்வாளானுள்.

கருணை வாரி கூரேக முகமும் வீர மாருத
கழலு நீபவேல் வாகு மறவேனே

ஆயுர்வேதவித்வான் B.V. பண்டிட்ஸ்
'சத்வைத்யசாலை' நஞ்சன்கூடு

I.D.L.21 ஸ்வாஸ்கோ இருமல், காசம் சுவாச வியாதிக்கு
I.D.L.72 ஹார்டோன் ஹிருதய வலி, மயக்கம், துடிப்புக்கு
I.D.L.75 டீப்சன் ஜீரண உபாதைக்கு
I.D.L.99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்

I.D.L.71 ப்ரீமெலெக்ஸ் ரத்த, பல விருத்திக்கு
I.D.L.97 ஹிஸ்மெனு பலஹீனம் மயக்கத்திற்கு
I.D.L.81 ப்ரதமென்ஸ் ருதுக உபாதைக்கு
I.D.L.91 யூடிரல் கெர்ப்பாசய டானிக்
I.D.L.96 டோனடெல் ஜீர்ண விருத்திக்கு

I.D.L.12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
I.D.L.16 கர்ஜன் கோரோசன மாத்திரை
I.D.L.15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
I.D.L.31 சீசுராக் ஜீர்ண டானிக்

அவசிய தின உதவிகள்
"நஞ்சன்கூடு பல்பொடி" I.D.L.61 (பேடிகேட்)
பயோரியா, மற்ற பல் உபாதைகளுக்கு
I.D.L.78 கூலெக்ஸ் உஷ்ண, சமன தைலம்
I.D.L.55 ஜிஞ்சிப் அஜீரண, பித்த சமனி
'யூனிகான்' சுத்த தேன்

யுனைடெட் கன்ஸர்ன்
52. பந்தர் தெரு :: மதராஸ்.1

431

எனக்குள்ளே
நீயிருக்க
வுனக்குள்ளே
நானிருக்க
னக்கவலை தீர
வரமருள்வாய்
பூரணமே

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Reg. No. M. 5390

ஷண்முகம் பிராண்டு
ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.
TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்
பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்
53, கிடங்கு தெரு, மதராஸ்-1.

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.